**நாள்: 08.07.2026**

**O.S. No. 47/2020**

**பி.சா.1**
**பெயர்: பஜ்லுல்ஹக் , த/பெ. இஸ்மாயில்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் தரப்பில் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் அனுபவத்தில் இருந்து வரும் அரசு புறம்போக்கு நிலத்தை ஜமாத்து இடம் என்று சொல்லி நாங்கள் அபகரிக்க முயற்சி செய்வதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு எதிருரையில் என்ன கட்சி செய்துள்ளேன் என்றால் இது ஜமாத்து இடம் என கட்சி செய்துள்ளேன்.

ஜமாத்துக்கு சொந்தமான இடம் என்பதற்கு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜமாத்தால் கிரயம் பெறப்பட்ட பதிவு மூல ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் யாருக்கு யாரால் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் அப்போதைய ஜமாத் பொறுப்பாளர்களுக்கு சிக்கந்தர் ட்ரஸ்ட் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து ஆரம்பத்தில் சிக்கந்தர் ட்ரஸ்ட்க்கு சொந்தமானது என்று கூறுகிறேனா என்றால் ஆமாம். வழக்கு எதிருரையில் மேற்படி சிக்கந்தர் ட்ரஸ்ட்டிடம் இருந்து தாவா சொத்து கிரயம் பெறப்பட்ட விபரத்தை கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. ஜமாத்துக்கு எழுதி கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பதிவு கிரய ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் ஜமாத்தில் என்ன பொறுப்பில் எப்போதிலிருந்து பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் ஜமாத் செயலாளராக 2020 லிருந்து

பொறுப்பில் இருந்து வருகிறேன். தாவா சொத்து தொடர்பாக இதற்கு முன் நடைபெற்ற வழக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியும். இதற்கு முன்னர் நடந்த வழக்கு குறித்த ஆவணங்கள் ஜமாத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் இதற்கு முன் தாவா சொத்து தொடர்பாக வழக்கு நடைபெற்றதா என்றால் நடைபெற்றது.

இந்நீதிமன்ற வழக்கு முடிவுக்கு எதிராக நாகபட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற மேல்முறையீட்டு வழக்கு தொடர்பாக விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேல்முறையீடு யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. ஆனால் ஜமாத்துக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது. எந்த ஆண்டு தீர்ப்பு ஏற்பட்டது என்றால் தெரியாது. எத்தனை முறை திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் தெரியாது. கடைசியாக வந்த தீர்ப்பு விபரம் மட்டும் தெரியும். தீர்ப்பு தேதி தெரியுமா என்றால் தெரியாது.

நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு ஏற்பட்டது என்றால் தாவா சொத்து ஜமாத்துக்கு சொந்தமானது என்றும் அதில் இருக்க கூடிய கோபால் என்பவர் இடத்தை காலி செய்ய வேண்டும் என்றும் தீர்ப்பானது. தீர்ப்பாணை ஏற்பட்ட போது 1ம் வாதியின் கணவர் கோபால் என்பவர் தாவா சொத்தின் அனுபவத்தில் தான் இருந்தார் என்றால் கோபால் என்பவர் இருந்தார் அவர் வாதியின் கணவர் என்று தெரியாது. 2,3 வாதிகளின் தந்தை கோபால் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி கோபால் என்பவருக்கும் வாதிகளுக்கும் உள்ள உறவு முறை குறித்து மறுத்து நான் என் வழக்கு எதிருரையில் கூறவில்லை என்றால் சரிதான்.

நாகபட்டினம் சார்பு நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்பை அனுசரித்து ஜமாத்தால் எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கை என்ன என்றால் நிறைவேற்று மனு தாக்கல் செய்ய தயாரான போது கோபால் என்பவர் தாமாக முன்வந்து

காலி செய்து விட்டார். என் பிறந்த தேதி என்ன என்றால் 27.11.1980 ஆகும். 1980 க்கு முந்தைய ஜமாத்து நடவடிக்கைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஜமாத்தில் உள்ள ஆவணங்கள் மூலமாக தெரியும். ஜமாத்துக்கு சொந்தமான சொத்து குறித்து ஜமாத் நிர்வாகத்தால் தனியாக பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். ஜமாத்துக்கு சொந்தமான சொத்து நிர்வாகம் குறித்து மேற்படி பதிவேட்டில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான்.

தாவா சொத்தை கோபாலிடமிருந்து வசம் எடுத்து கொண்டது குறித்து ஜமாத்து நிர்வாகத்தால் பராமரிக்கப்படும் பதிவேட்டில் குறிப்பு செய்யப்பட்டுள்ளதா என்றால் நினைவில்லை. மேற்படி ஜமாத் சொத்து பதிவேடு நாளது வரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து கோபால் என்பவரால் அனுபவம் செய்யப்பட்டு வந்து அதன் பிறகு அவர் இறப்புக்கு பிறகு அவரது வாரிசுகளான வாதிகளால் தொடர்ந்து அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றால் உண்மையல்ல.

தாவா சொத்து தற்போது என்னவாக உள்ளது என்றால் காலி இடத்தில் எங்களால் 2020 ல் கொட்டகை மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கொட்டகை ஜமாத்தால் அமைக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த புலஎண்ணில் கொட்டகை அமைக்கப்பட்டது என்றால் புலஎண் 570/1D1ல் சுமார் 450 சதுரடி அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கொட்டகையானது ஜமாத் சொந்த செலவில் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கொட்டகை செலவிற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்மான நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது பழைய மின் இணைப்பு உள்ளது. வழக்குரையுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் விபரம் குறித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா சொத்திற்கான நகர அளவை பதிவேடு பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி நகர அளவை பதிவேட்டில் தாவா சொத்து அரசு புறம்போக்கு என கண்டுள்ளது என்றால் உண்மையல்ல. முன்புறம் சாலை ஓரம் பகுதி மட்டும் தான் அரசு புறம்போக்கு ஆகும்.

வழக்கு எதிருரை சங்கதிகள் தற்போது நிர்வாகத்தில் உள்ளவர்களால் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு எதிருரையில் முன்புறம் அரசு புறம்போக்கு சொத்து உள்ளது குறித்து கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அரசு புறம்போக்கு சொத்தில் வாதிகள் குடியிருக்கிறார்களா என்றால் இல்லை. ஜமாத்துக்கு சொந்தமானதாக சொல்லப்படும் தாவா இடத்தில் வாதி குடியிருக்கிறார்களா என்றால் இல்லை.

வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சொத்தின் அனுபவம் குறித்த ஆவணங்களான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பிறப்பிட சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றை மறுத்து மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. அவை கோபால் காலத்தை சேர்ந்தவை. தாவா சொத்து நாளதுவரை வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் உண்மையல்ல. நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்புக்கு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு ஸ்வாதினம் எடுக்கப்படவில்லை என்றால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே கோபால் இடத்தை காலி செய்துவிட்டார்.

ஜமாத்துக்கு ஆதரவாக ஏற்பட்ட 29.11.1975 தேதிய தீர்ப்பு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்படாததால் காலாவதி ஆகிவிட்டது என்றாலும் அதனை மறைப்பதற்காகவே கோபால் காலி செய்துவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

//குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.//

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.07.08 18:35:53 +0530